**Dated : 19.11.2024**

**O.S.No. 361/2022**

**PW.2 - திரு. சந்திரசேகரன், த/பெ. முனிவெங்கடசாமி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னிடம் காட்டப்படும் என்னுடைய பிரமாண முதல் பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தெரிந்து கொண்டு தான் அதில் நான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கில் நடந்த சம்பவம் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி அருண்காந்தி எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் எனக்கு தாய்மாமன். பிரதிவாதியின் மகன் ஜே.சி.பி. இயந்திரம் வாங்குவதற்காக ரூ.10.00 இலட்சம் கடன் கேட்டு என்னிடம் தான் அணுகினார் என்றால் சரிதான். பிரதிவாதியின் மகன் ஜே.சி.பி. இயந்திரம் வாங்குவதற்கான தேவைப்படும் தொகை ரூ.10.00 இலட்சத்தை அவரது பிராதில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். அவ்வாறு பிரதிவாதியின் மகன் என்னிடம் கடன் கேட்டு எப்போது வந்தார் என்றால் 2021ம் வருடம் ஏப்ரல் மாதம் வந்தார், தேதி என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

புரோநோட் எழுதும் போது யார் யார் அங்கிருந்தார்கள் என்றால் வாதி அருண்காந்தி, மோகன், சீனிவாசன், சந்திரசேகர் ஆகியோர்கள் இருந்தனர். அந்த புரோ நோட்டில் நான் எத்தனையாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் 2வது சாட்சியாக கையொப்பம் செய்தேன். அந்த தாவா கடனுறுதி புரோட்டை எழுதிய மோகன் வாதியின் சகோதரர் என்றால் சரிதான். தாவா கடனுறுதி பத்திரம் எங்குவைத்து எழுதப்பட்டது என்றால் பிரதிவாதியின் வீட்டின் வராண்டாவில் வைத்து எழுதப்பட்டது. அந்த கடன் தொகை காசோலை மூலம் கொடுக்கப்பட்டதா, தொகையாக கொடுக்கப்பட்டதா என்றால் தொகையாக கொடுக்கப்பட்டது. அந்த தொகை 2 ஆயிரம் தாள் கொண்ட 5 கட்டுகள் கொடுக்கப்பட்டது. ஒரு கட்டு என்றாலே 100 தாள்கள் கொண்டது தான். தாவா

கடனுறுதி பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள வாசகங்கள் எனக்கு தெரியும். ஏப்ரல் 2020ல் எழுதப்பட்டது.

அந்த கடனுறுதி பத்திரத்தில் எதற்காக கடன் பெற்றார் என்ற விவரம் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஜே.சிபி இயந்திரம் வாங்குவதற்கும், அவரது குடும்பத்தில் உள்ள பிரச்சனைக்காக அந்த கடன் வாங்கப்பட்டது. அந்த கடன் தொகைக்கு வட்டி விகிதம் 2 சதவீதம் என்று காட்டப்பட்டுள்ளது. கடனுறுதி பத்திரம் ஏற்பட்ட பின்னிட்ட இடைகாலத்தில் பின்னிட்டு கடன் தொகை ஏதும் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் ரூ.25,000/– திருப்பி கொடுத்தது எனக்கு தெரியும். அந்த தொகையை அவருக்கு கொடுக்கும் போது நானும் உடனிருந்தேன். அந்த தொகையை திருப்பி கொடுத்த தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால் 202ம் வருடம் கொடுத்தது எனக்கு தெரியும். அப்போது யார் அந்த இடத்தில் இருந்தார் என்றால் நானும், வாதியும் இருந்தோம். அதற்காக நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை.

வாதியும், பிரதிவாதியும் மட்டும் தான் அப்போது கையொப்பம் போட்டுக்கொண்டார்கள், நாங்கள் உடன் மட்டும் தான் இருந்தோம், கையெழுத்து எதுவும் போடவில்லை. பிரதிவாதிக்கு சொந்தமான நிலத்திற்கு 2 பிட் தள்ளி என்னுடைய ஒரு நிலம் இருந்தது. என்னுடைய நிலத்திற்கு உண்டான நீர்பாச வசதிக்கு தடங்களாக பிரதிவாதியின் நிலம் இருந்தது என்றால் தவறு. நான் பிரதிவாதியிடம் அவருடைய நிலத்தை பலமுறை கிரயத்திற்கு கேட்டேன் என்றால் இல்லை. என்னுடைய முதல் பிரமாண பத்திரிக்கையில் தாவா கடனுறுதி பத்திரம் ஏற்பட்ட போது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பாக ஆவணம் ஒப்படைக்கப்பட்ட விவரத்தை வாதி தன்னுடைய பிராதில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். வாதி தாவா தாக்கல் செய்து, அதில் சொத்தை ஜப்தி செய்ய கோரிய மனுவில் வாதிக்கு பாத்தியப்படாத நிலங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அவ்வாறு இல்லை.

அவ்வாறு அந்த இடைகால ஜப்தி மனுவில் வெங்கட்ராஜ் என்பவரின் சொத்தையும் சேர்த்து ஜப்தி செய்ய மனுவில் சொல்லப்பட்டிருந்தது என்றும், அதனால் வெங்கட்ராஜ் அந்த ஜப்தி மனுவில் தன்னையும் தரப்பினராக சேர்த்துக்கொள்ள கோரி மனுதாக்கல் செய்திருந்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியது போல் பிரதிவாதி, வாதியிடம் கடன் ரூ.10.00 இலட்சம் பெறவில்லை என்றாலும், அவரது கடனுறுதி பத்திரம் எதுவும் வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், கடனுறுதி பத்திரத்தில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றால் சரியல்ல. நானும், வாதி, மற்றும் கடனுறுதி பத்திரம் எழுதிய மோகன் ஆகியோரும் சேர்த்து பிரதிவாதியிடம் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், மேற்படி கடனறுதி பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள மோசடி தாவாவிற்கு நான் உறுதுணையாக இருந்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

S KUMARAGURU — Digitally signed by S KUMARAGURU

Principal District Judge,
Krishnagiri.